©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 50] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 13, 2017
கார்த்திகை 27, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 162, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 21 செப்டம்பர் 2017.]*

1936–ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 26–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் விதிகளில் செய்யக்கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள், அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 26–ஆம் பிரிவின் உட்பிரிவு (5) இல் சொல்லியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவுத் திருத்தங்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து தொண்ணூற்று ஐந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை எண். 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032–ல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், விதி 18–இன் வரம்புநிபந்தனையில் உள்ள "தமிழ்நாடு 1950–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "அல்லது தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணியாளர்கள் (வேலை வாய்ப்பு பணிநிலைமைகளை முறைப்படுத்துதல்) விதிகளின்கீழ், 242–ஆம் விதியில் கோரியுள்ளவாறு விவர அட்டவணை XIII-ன்கீழ் படிவம் XXV-ல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்,*
*(முழு கூடுதல் பொறுப்பு).*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 150, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 31 ஆகஸ்ட் 2017.]*

1970–ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்), சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 35–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) விதிகளில் செய்யக்கருதியுள்ள கீழ்காணும் திருத்தங்களின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 35–ஆம் பிரிவைச் சேர்ந்த (1)–ஆம் உட்பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவை, 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி சென்னை–600 032–இல் உள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்.–

(1) 17–ஆம் விதியில்.– (a) துணை விதி (2), இல், ‘‘கருவூலப்பற்றுச்சீட்டு வாயிலாக’’, என்ற சொற்றொடருக்குப்பின்னர், ‘‘அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணையவழி தொகை செலுத்துவதன் பேரில்’’, என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்;

(b) (3)–ஆம் துணை விதிக்குப்பதிலாக, பின்வரும் துணைவிதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–‘‘(3) துணை விதி (1)–இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது பதிவு அலுவலருக்கு நேரடியாக அளிக்கப்பட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்படவேண்டும்’’;

(2) 21–ஆம் விதியில்,–(a) (3)–ஆம் துணை விதிக்குப்பதிலாக, பின்வரும் துணைவிதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; அவையாவன:– (3) ‘‘துணை விதி (1)–இல், குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்படவேண்டும்.’’;

(b) (5) ஆம் துணை விதியில், ‘‘கருவூலப்பற்றுச்சீட்டு வாயிலாக’’ என்ற சொற்றொடருக்குப்பின்னர்,’’ அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணையவழி தொகை செலுத்துவதன் பேரில்’’ என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்;

(3) 29, ஆம் விதியில், (2)–ஆம் துணை விதிக்குப்பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; அவையாவன:–

‘‘(2A) துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அதிகாரிக்கு நேரடியாக அளிக்க வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்;

ஆயினும், அத்தகைய விண்ணப்பத்துடன், கருவூலப்பற்றுச்சீட்டு அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணைய வழி தொகை செலுத்துகை முறையில் உரிய கட்டணம் செலுத்தப்பட்டதற்கான சான்று இணைத்து அனுப்பப்படவேண்டும்.’’;

**மங்கத் ராம் ஷர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ).*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.